18 வது உதவி மாநகர உரிமையியல் நீதிமன்றம், சென்னை.

முன்னிலை–திரு. இரா. கார்த்திகேயன், பி.ஏ., பி.எல்.,

18 வது உதவி நீதிபதி (FAC)

2026 ம் வருடம் ஜூலை மாதம் 30 ம் தேதி, வியாழக்கிழமை

அசல் வழக்கு எண்: 9663/2021

(CNR No.–TNCH01–039284–2021)

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா,

(சிறு மற்றும் குறு நிறுவனங்கள் மையம்),

(Small and Medium Enterprises Centre)

விலாசம் எண் 157, அண்ணா சாலை,

5 வது தளம், சென்னை– 600 002.

... வாதி

..எதிர்...

திரு. பி. கென்னெடி,

த/பெ. பொன்னுசாமி,

விலாசம் எண் ஏ–11, 3 வது மாடி, விகாஸ் ஹில் வியுவ்,

எண். 159, தர்கா சாலை, இசட் பல்லாவரம் M+OG,

ஆலந்துார்,

சென்னை – 600 043.

... பிரதிவாதி

இந்த வழக்கு 20.07.2026 ம் தேதி அன்று இறுதியாக இந்நீதிமன்றம் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் M/s. சுரேஷ் லா அசோசியேட்ஸ், D.தமிழ்செல்வி மற்றும் G.எழில்பிரியங்கா ஆகியோர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திருவாளர்கள் K.செந்தில்குமார். L.முனிசாமி மற்றும் A.மணிகண்டன் ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று பிறப்பிக்கப்படும்,

<u>தீர்ப்பு</u>

உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 37–ன் கீழ், (a) பிரதிவாதி நிலுவைத் தொகை ரூ.8,65,271/– னை வழக்கு தேதி முதல் ஆண்டிற்கு 9.75% சதவீத வட்டி சேர்த்து வழங்க வேண்டும் என்றும், (b) பிரதிவாதி நிலுவைத் தொகை ரூ.27,677/–னை வழக்கு தேதி முதல் ஆண்டிற்கு 7.40% சதவீத வட்டி சேர்த்து வழங்க வேண்டும் என கோரியும், வழக்கு செலவு தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. பின் பிரதிவாதி எதிர்வாதம் செய்ய மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டதின் பேரில் இருதரப்பும் கேட்கப்பட்டது.

1. வாதி தரப்பு வழக்குரை சுருக்கம்:

(i) வாதி வங்கி பிரதிவாதிக்கு கடந்த 23.03.2019 ம் தேதி ரூ.6,50,000/-னை "Term Loan" என்ற தலைப்பின் கீழ் கடனாக வழங்கியது. அன்றைய தினமே பிரதிவாதி அதற்கான பிராமிசரி நோட்டு உள்ளிட்ட ஆவணங்கள் ஏற்படுத்தி கொடுத்தார். பின்னிட்டு கடந்த 28.07.2020 ம் தேதி ரூ26,000/-னை GECL என்ற பெயரில் பிரதிவாதி வாதி வங்கியிடம் இருந்து கடனாக பெற்றார். அதற்கான உரிய ஆவணங்களை பிரதிவாதி வாதி வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்தார். பிரதிவாதி முறையாக ஒப்பந்தப்படி ஒப்புக் கொண்ட விதத்தில் தவணை தொகையை செலுத்துவதாக உறுதி அளித்தார். மேற்படி ரூ.6,50,000/- கடனுக்கு வட்டி விகிதம் ஆண்டுக்கு 9.75% ஆகும். ரூ.26,000/- கடனுக்கு வட்டி விகிதம் ஆண்டுக்கு 7.40% ஆகும். பிரதிவாதி கடன் தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டார். ஆகவே வாதி வங்கி கடன் தொகையை வட்டியுடன் பெற உரிமை கொண்டுள்ளது என்பதே வாதி வழக்குரை சுருக்கம் ஆகும்.

<u>2. பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரை சுருக்கம்:</u>

(i) வாதி வழக்குரை சங்கதிகள் உண்மையானவைகள் அல்ல. பிரதிவாதி வாதி வங்கியில் முத்ரா (Mudra) கடன் வேண்டி அதாவது அவர் சுயமாக கார் வாங்கி வாடகைக்கு இயக்கி தொழில் செய்ய கடன் கோரி விண்ணப்பித்தார். வாதி வங்கி நேரடியாக கார் விற்பனை முகவருக்கு பணம் செலுத்தியது. அது சம்மந்தமான குறிப்பு வாகன பதிவு சான்றிதழில் பதிவு செய்யப்பட்டது. பிரதிவாதி வாதி வங்கியில் கடன் பெற்று கார் வாங்கிய சமயத்தில் கோரோனா நோய் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. அதனால் பிரதிவாதியால் கார் கடன் தவணையை செலுத்த இயலவில்லை. கடன் தவணைகளை சரியாக வாதி வங்கிக்கு செலுத்த இயலவில்லை. பின் வாதி வங்கி பிரதிவாதிக்கு பல அறிவிப்புகளை கடன் தொகை கேட்டும் அல்லது காரை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என கேட்டும் அனுப்பியது. அவற்றில் பிரதிவாதி பெற்ற கடன், வாகன கடன் என்றே குறிப்பிட்டு இருந்தது. ஆகவே பிரதிவாதி வேறு வழியின்றி கட்டாயத்தின் பேரில் காரை வாதி வங்கிக்கு அதன் பிரதிநிதியிடம் கடந்த 06.11.2021ல்

ஒப்படைத்தார். அப்பொழுது கார் நல்ல நிலையில் இருப்பதாகவும் அதன் விற்பனை தொகை மொத்த கடனுக்கும் சரியாக இருக்கும் என பிரதிவாதிக்கு தெரிவிக்கப்பட்டது. வாதி அந்த கார் விற்பனை விபரத்தை வழக்குரையில் மறைத்துள்ளார். பிரதிவாதி கடன் வாங்கியதை மறுக்கவில்லை. ஆனால் அது வாகன கடன் என்றுதான் பிரதிவாதி நம்பும் படி வாதி வங்கி செயல்பட்டது. வாதி வங்கி கார் விற்பனை தொகையை கடன் கணக்கில் முறையாக கழித்துக் கொள்ள கடமை கொண்டுள்ளது. ஆகவே வாதி வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்பதே எதிர் வழக்குரை சுருக்கம் ஆகும்.

வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலனை செய்து கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

<u>3. எழுவினாக்கள்:</u>

1. Whether the defendant is liable to pay the amount as claimed by the plaintiff or not?
2. Whether the plaintiff is entitled to the suit claim with interest or not?
3. To what other relief?

4. பின்னிட்டு வழக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டது. வாதி வங்கி தரப்பில் வங்கி மேலாளர் C. தமிழ்கொடி என்பவர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. (பி.வா.சா.ஆ 1, 2 ஆவணங்கள் வா.சா.1 குறுக்கு விசாரணையின் போது குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5. (i) இருதரப்பும் கேட்கப்பட்டது. வாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் வழக்குரை சங்கதிகளை வலியுறுத்தி வாதிட்டார். ஆகவே வாதி கோரிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்க வேண்டும் என வாதிட்டார்.

(ii) பிரதிவாதி தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிர்வழக்குரை சங்கதிகளை வலியுறுத்தி வாதிட்டு வாதி வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வழக்கின் தன்மை கருதி எழுவினா 1, 2க்கு ஒன்றாக தீர்வு காணலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

6. <u>எழுவினா – 1, 2 க்கு தீர்வு</u>

<u>எழுவினா – </u><u>1</u> – வாதி வங்கி கோரிய தொகையை செலுத்த பிரதிவாதி கடமை கொண்டுள்ளாரா?

எழுவினா – 2 – வாதி வங்கி கோரியவாறு வழக்கு தொகை பெற வாதி வங்கி உரிமை கொண்டுள்ளதா?

(i) வாதி தரப்பு வழக்கை நிரூபிக்கும் விதமாக வாதி வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட நபர் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ 1 முதல் 11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

(ii) வாதி வங்கி பிரதிவாதி கடந்த 23.05.2019 ம் தேதி ரூ. 6,50,000/–னை வரை கடனாக பெற்றுக் கொண்டார் என்றும், அக்கடன் "Term Loan" என்ற தலைப்பில் வழங்கப்பட்டது என்றும், மேற்படி கடனுக்கு ஆதரவாக வாதி வா.சா.ஆ 2 முதல் வா.சா.ஆ 4 வரையிலான ஆவணங்களை ஏற்படுத்தி கொடுத்தார் என்றும், பின் 28.07.2020 ம் தேதி வாதி வங்கியில் பிரதிவாதி ரூ.26,000/– GECL என்ற பெயரில் கடனாக

பெற்றுக் கொண்டு அதற்கு ஆதரவாக வா.சா.ஆ. 5, 6 ஆகியவற்றை ஏற்படுத்தி கொடுத்தார் என்றும் வழக்கு முன்வைத்துள்ளது.

(iii) மேற்படி இரண்டு கடன் கணக்குகளிலும் வாதி வங்கிக்கு பிரதிவாதி வா.சா.ஆ 7, வா.சா.ஆ 8 கணக்குப்பட்டியல்கள் படி நிலுவை தொகை செலுத்த வேண்டும் எனவும் வாதி வங்கி வழக்கு முன்வைத்ததுள்ளது.

(iv) பிரதிவாதி மேற்படி இரண்டு கடன்களையும் மறுக்கவில்லை. தன்னுடைய எதிர் வழக்குரையில் பிரதிவாதி கடன் பெற்றதாக சொல்லும் விவரத்தை மறுக்கவில்லை என்றும், அதனை ஆட்சேபிக்கவில்லை என்றும் கூறியுள்ளார். வாதி வங்கி பிரதிவாதிக்கு வழங்கிய கடனை "வாகன கடன்" என்று கூறியது, ஆனால் வழக்கில் "Term Loan" என கூறியுள்ளது என எதிர்வழக்குரையில் கூறியுள்ளார். வாதி வங்கி சொன்ன வழக்கு கடன்கள் இரண்டினையும் பிரதிவாதி மறுக்கவில்லை என்ற நிலையில், வாதி வங்கி வழக்குரையில் சொன்ன கடன்களை பிரதிவாதி பெற்றுள்ளார் என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(v) பிரதிவாதி தனது எதிர் வழக்குரையில் வாதி வங்கி காரை விற்று அந்த தொகையை கடன் கணக்கில் கழித்துக் கொள்ள கடமை கொண்டுள்ளது என எதிர்வாதம் முன்வைத்துள்ளார்.

(vi) வாதி வங்கி தரப்பில் பிரதிவாதி ஒப்படைத்த கார் விற்பனை செய்யப்பட்டது என்று மேற்படி விற்பனை சான்றினை வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்துள்ளது.

(vii) மேலும் வழக்கு நிலுவையில் உள்ள பொழுது கடந்த 20.07.2023 ல் வாதி வங்கி மேற்படி கார் விற்பனை மூலம் கிடைத்த வா.சா.ஆ 11 ல் சொல்லப்பட்ட விற்பனை தொகை ரூ3,09,250/–னைப் பொறுத்து இந்நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்து வழக்கு தொகையில் மேற்படி தொகையை சரிசெய்து கொள்ள கேட்டுக் கொண்டு உள்ளது. அந்த குறிப்பிணை இந்நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி பிரதிவாதி எதிர்வழக்குரையில் கோரியவாறு கார் விற்பனை தொகை வழக்கு தொகையில் இருந்து வாதி வங்கியால் சரிசெய்து கொள்ளப்பட்டது என்று தெரிய வருகிறது.

(viii) மேலும் பிரதிவாதி தரப்பில் வா.சா. 1னை குறுக்கு விசாரணை செய்த பொழுது, 12.12.2025 தேதியிட்ட குறுக்கு விசாரணையில், கீழகண்டவாறு கேள்வி முன்வைக்கப்பட்டுள்ளது, ***"இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது காரை விற்று லோன் அக்கவுண்டில் செலுத்தி இருப்பதாகவும், தாங்கள் பாக்கி தொகையை மட்டும் தான் வழக்கில் கோர முடியும் என்றால் சரிதான்."***

(ix) அதன்படி பிரதிவாதி மேற்படி கார் வாங்குவதற்காக பெறப்பட்ட கடன் தொகையில் திரும்ப செலுத்த வேண்டிய நிலுவையில் உள்ள தொகையில் கார் விற்பனை மூலம் சரி செய்யப்பட்ட தொகை நீங்கலாக மீதம் உள்ள தொகையை மட்டும் செலுத்த வேண்டும் என வா.சா.1 ஒப்புக் கொண்டு உள்ளார் என தெரிய வருகிறது. மேலும் பிரதிவாதி பெற்ற இரண்டாவது கடன் நிலுவை தொகையையும் பிரதிவாதி ஒப்புக் கொண்டுள்ள நிலையில், அந்த கணக்கில் நிலுவையில் உள்ள தொகைகையையும் பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்த கடமை கொண்டு உள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. மேலும் வாதி வங்கி கடந்த 23.05.2019 தேதி வழங்கப்பட்ட ரூ.6,50,000/- கடனுக்கு வட்டி

விகிதம் ஆண்டுக்கு 9.75% என்றும், 28.07.2020 தேதி வழங்கப்பட்ட ரூ.26,000/- கடனுக்கு வட்டி விகிதம் ஆண்டுக்கு 7.40% என்றும் கோரியுள்ளது. இதனை பிரதிவாதி குறிப்பிட்டு மறுக்கவில்லை. அதன்படி வாதி வங்கி கோரிய வட்டி பெற உரிமை உடையது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(x) இங்கு வாதி வங்கி கடன் விண்ணப்பத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றும், கடன் தலைப்பை வாதி வங்கி மாற்றி கூறியுள்ளது என்றும், பிரதிவாதி தரப்பு முன்வைத்த எதிர்வாதங்கள் வாதி வழக்கை பாதிப்பதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xi) அதன்படி வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டு உள்ள ரூ.6,50,000/- கடனுக்கான கணக்குப்பட்டியல் படி வழக்கு தேதியில் நிலுவையில் உள்ள தொகை ரூ.8,65,271/-ல் கார் விற்பனை மூலம் கிடைத்த ரூ.3,09,250/- போக மீதமுள்ள தொகை ரூ5,56,021/- னை மட்டும் பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்த கடமை கொண்டுள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(xii) மேலும் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்ட ரூ.26,000/−க்கான கடன் கணக்குப்பட்டியல் படி நிலுவை தொகை ரூ.27,677/−னை பிரதிவாதி வாதி வங்கிக்கு திரும்ப செலுத்த கடமை கொண்டுள்ளார் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அவ்வாறே வாதி கோரிய இவ்வழக்கு தொகை மேற்கண்டவாறு வாதிக்கு பகுதியாக கிடைக்கத்தக்கது என்றே எழுவினா 1, 2க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

<u>எழுவினா −3</u> வேறு என்ன பரிகாரங்கள்?

(i) மேற்கண்ட எழுவினா 1, 2ல் கண்ட முடிவுகளின் படி வாதிக்கு வேறு பரிகாரங்கள் எதுவும் வழங்க வேண்டிய அவசியம் எழவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

(ii) மேற்கண்ட எழுவினா 1, 2ல் கண்ட முடிவுகளின் படி வாதி கோரிய ரூ.6,50,000/− கடனுக்கான, வா.சா.ஆ.7 கணக்குப்பட்டியல் படி வழக்கு தேதியில் நிலுவையில் உள்ள தொகை ரூ.8,65,271/−ல் கார் விற்பனை மூலம் கிடைத்த ரூ.3,09,250/− போக மீதமுள்ள தொகை ரூ5,56,021/−னை மட்டும் பிரதிவாதி வாதி வங்கிக்கு செலுத்த கடமை

கொண்டுள்ளார் எனவும், ரூ.26,000/–க்கான, வா.சா.ஆ,8 கடன் கணக்குப்பட்டியல் படி நிலுவை தொகை ரூ.27,677/–னை பிரதிவாதி வாதி வங்கிக்கு திரும்ப செலுத்த கடமை கொண்டுள்ளார் என்றும். அவ்வாறே வாதி கோரிய வழக்கு தொகை மேற்கண்டவாறு வாதிக்கு பகுதியாக கிடைக்கத்தக்கது என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. அவ்வாறே வாதி வழக்கு பகுதியாக அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவாக வாதி வழக்கு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. அதன்படி, (i) வழக்கு (a) பரிகாரத்தினை பொறுத்து பிரதிவாதி ரூ5,56,021/– னையும், அதற்கு இவ்வழக்கு தேதி முதல் இத்தீர்ப்பு தேதி வரை ஆண்டிற்கு 9.75 % வட்டி சேர்த்து அதனை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வாதிக்கு வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு தொகை செலுத்தவில்லை என்றால் மேற்படி தொகைக்கு இத்தீர்ப்பு தேதி முதல் தொகை திரும்ப செலுத்தும் நாள் வரை ஆண்டிற்கு 6%வட்டி சேர்த்து வழங்க வேண்டுமென்றும்,

(ii) வழக்கு (b) பரிகாரத்தினை பொறுத்து பிரதிவாதி ரூ 27,677/– னையும், அதற்கு இவ்வழக்கு தேதி முதல் இத்தீர்ப்பு தேதி வரை ஆண்டிற்கு 7.40 % வட்டி சேர்த்து அதனை இன்றிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வாதிக்கு வழங்க வேண்டும் என்றும், அவ்வாறு தொகை செலுத்தவில்லை என்றால் மேற்படி தொகைக்கு இத்தீர்ப்பு தேதி முதல் தொகை திரும்ப செலுத்தும் நாள் வரை ஆண்டிற்கு 6%வட்டி சேர்த்து வழங்க வேண்டுமென்றும்,

(iii) பிரதிவாதி, வாதிக்கு வழக்கு செலவுத் தொகை வழங்க வேண்டுமென்றும் இந்நீதிமன்றம் தீர்ப்பு அளிக்கின்றது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினி மூலமாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிப்பார்க்கப்பட்டு இன்று 30 ஆம் தேதி ஜூலை மாதம் 2026 ல் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KARTHIKEYAN Digitally signed by KARTHIKEYAN

18 வது உதவி நீதிபதி(FAC)
18 வது மாநகர உரிமையியல்
நீதிமன்றம், சென்னை.

வாதி தரப்பு சாட்சிகள் :

1. வா.சா.1 – C. தமிழ்கொடி (வங்கி மேலாளர்)

வாதி தரப்பு சான்றாவணங்கள் :

01.	வா.சா.ஆ.1	07.02.2024	Authorization Letter	அசல்
02.	வா.சா.ஆ.2	23.05.2019	Letter of arrangement	அசல்
03.	வா.சா.ஆ.3	23.05.2019	Agreement of loan – cum hypothecation	அசல்
04.	வா.சா.ஆ.4	23.05.2019	Demand promissory note for Rs.6,50,000/-	அசல்
05.	வா.சா.ஆ.5	28.07.2020	Letter of arrangement	அசல்
06.	வா.சா.ஆ.6	28.07.2020	Supplemental Agreement of loan cum hypothecation	அசல்
07.	வா.சா.ஆ.7	28.05.2019 to 29.11.2021	Statement of Accounts	அசல்
08.	வா.சா.ஆ.8	28.07.2020 to 29.11.2021	Statement of Accounts	அசல்
09.	வா.சா.ஆ.9	27.10.2021	Reposes vehicle notice with Acknowledgement	பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல்
10.	வா.சா.ஆ.10	24.12.2021	The New Indian Express English Edition and Dinamani Edition	அசல்
11.	வா.சா.ஆ.11	19.01.2022	Copy of the certificate of sale	உண்மை நகல்

பிரதிவாதி தரப்பு சாட்சிகள்: – இல்லை

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் :</u>

01.	பி.சா.ஆ.1	28.01.2025	ஆவணங்கள் கோரி வாதி வழக்கறிஞருக்கு பிரதிவாதி வழக்கறிஞர் வழங்கிய அறிவிப்பு	அசல்
02.	பி.சா.ஆ.2	23.05.2019	Terms and condition in respect of loan	நகல்

KARTHIKEYAN Digitally signed by KARTHIKEYAN

18 வது உதவி நீதிபதி(FAC)
18 வது மாநகர உரிமையியல்
நீதிமன்றம், சென்னை.

<u>Draft/Fair Judgment</u>

O.S. No.9663/2021

Date: 30.07.2026

XVIII Assistant Court
City Civil Court, Chennai